46

# ஸ்ரீ சற்குரு ஸ்தவம்.

கணேசமூர்த்தி.

Q2:417
N14
841

உ

விநாயகன்றுணை.

# ஸ்ரீ சற்குருஸ்தவம்.

ஸ்ரீமத் சுவகீயானந்த யோகிகளென்னும்

அகஸ்தியமாமுனிவர் மரபு

வேதாந்தவித்வசிரோன்மணி

ஸ்ரீமத். ல. நாராயணசாமி தேசிகர்

மாணாக்கரி லொருவராகிய

வேளியம்பாக்கம். கணேசமூர்த்தியாரா லியற்றி

ஷை தேசிகர் மாணாக்கரி லொருவரும்

சென்னை

ஸ்ரீ கஜவரதராஜப்பெருமாள் சந்நிதான தர்மீகர்

ஸ்ரீமத். பூ. அரியபுத்ரதாஸர் குமாரருமாகிய

பண்டிதர்

பூ. அ. கோவிந்தராஜ தாஸரால்

பார்வையிடப்பட்டு,

அகஸ்தியாச்ரம சாது சங்கத்தாரால்,

சென்னை:

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1914.

விலை அணா - 2.

# முகவுரை.

நாம் சுகபோகபாக்கியம் நிமிஷந்தோறும் வேண்டு கிறோம். ஆனால் பொருளல்லவற்றைப் பொருளென் றுணரும் மருளால் சுகமல்லவற்றைச் சுகமென்று கருதி பெருந்துக்கத்துக்காளாகிறோம். பரம கருணா நிதியாகிய சர்வேச்வரன் நாம் உண்மை யறிந்துய்யும் வண்ணம் தநுகரண புவனபோகங்களைக் கொடுத் தும் நாம் யார்? நமக்கித்தநுகரண புவனபோகங்க ளும் வேதாகம புராணேதிகா சாதிகளுங் கொடுத்த தார்? நாம்மீண்டும் மீண்டும் துக்கத்தையே கைக் கொள்வதின் காரணமென்னை? என்னும் விசாரமில் லாதவர்களா யுழலும் நமக்கு சாது சங்கத்தால் விவே காதிகள் கைவந்தும் வேதாத்தியயனஞ் செய்து ஆத்ம ஞாநிஷ்டை கூடிய் சற்குரு கடாக்ஷமின்றி புரு ஷார்த்தங் கைகூடுவதசாத்தியம். அங்ஙனந் தனது யதார்த்த சொரூபத்தை யடைந்த சிஷ்யனுக்கு சற் குரு சிந்தனையில்லையேல் சதா நிஷ்டை கைகூடுவ தில்லை யென்பது பெரியோர்களது நூற்கருத்தும் அநுபவமுமாம். ஆகையால் சற்குரு லக்ஷணத்திற் சிறிதுங் குறையாத வரும் பொதிகைமலைக் கரசாகிய அகத்தியமாமுனிவர் மரபில்வந்த ஞானானந்த நாத முனி சுவாமிகள் மாணாக்கருமாகிய வேதாந்த வித்வ சிரோன்மணி ஸ்ரீமத். ல. நாராயணசாமி தேசிகரை அநேக ஜன்ம புண்ய கர்ம பரிபாகத்தா லடைந்த வடியேனது ஜென்ம சாபல்யமாக்கிய வன்னோனை யுன்னுந்தோறும் வெளிவருவது சற்குருஸ்தவமாத லின் அதனை யென்புல்லறிவுக் கெட்டியமட்டிற் கவிக ளாகத் தொகுத்தனன். குற்றமுளதேல் உலகம் பொ றுக்க.

கணேசமூர்த்தி.

# அவையடக்கம்.

## நேரிசைவெண்பா.

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார் காணினிலை யென்ன—வழுத்தும்
பெரியா ருரைகேட்டும் பேசினே னின்னூல்
அரியகுரு பேருடன் னல்.

ஸ்ரீ நாராயணதேசிகரின் பிரதம மாணாக்கரும்
மேலக்குண்டையார் ஸ்வகீயாநந்த அகத்திய ஆசிரம
சங்கமூர்த்தியுமான
ஜயராமசுவாமிகளால் இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வேதமுதற் பொருளான பிரமத்தை
நன்குணர்த்தும் விமல ரான
போதகுரு நாரணரின் புகழ்விரித்து
குருஸ்தவமாய் புகன்ற தூய
காதலுற்ற கணேசரிட வன்பினுக்கு
நிகரொன்றுங் காணே மென்று
ஏதமிலா விகபரத்தோ ரிசைப்பதையா
னென்னென்று வியற்று வேனே.

சென்னை ஸ்ரீகஜவரதராஜபெருமாள் சந்நிதானதர்மீகர்

ஸ்ரீமத். பூ. அரியபுத்திர தாஸர் குமாரரும்

வேதாந்த வித்வ சிரோன்மணி

ஸ்ரீமத்-ல. நாராயணசாமிதேசிகர் மாணுக்கரிலொருவருமாகிய

பண்டிதர். பூ. அ. கோவிந்தராஜ தாஸரியற்றிய

# சிறப்புப்பாயிரம்.

நிலைமண்டில ஆசிரியப்பா.

கடலிடை யலருங் கவினுறு பூவி
னிடனக றேய மெவையினுஞ் ஞான
நாயக னணையு னன்மனை யென்னத்
தாயக மாகிச் சார்தரு மடியார்
தணலெரி துன்பச் சாகர னீந்த
குணகடல் குமரி குடகட லிமய
மென்னுன் கெல்லையி னின்புற வமரும்
பன்ணு வலர்பணி பாரத மாதா
வீன்றிடு சுதர்களி லெங்கு நிறைந்தெஞ்
ஞான்று முயிர்க்கரு ணவிலுங் கோவா
யெவ்வெக் காலத் தெவ்வெத் தேயத்
தெவ்வெத் தருமம தேசீ ரூட்டு
மவ்வக் காலத் தவ்வத் தேயத்
தவ்வத் தருமம தாக்கி யளிப்பா
னெவனவ னேபல விருடிக ளோத
தவமுனி யரசாய்த் தாரணி தன்னில்

அதுவே நீயெனு மருமறை நான்கு
மிதுவல தொருபொரு ளியைத லசத்யஞ்
சத்தியஞ் சத்தியஞ் சத்திய மெனவே
வத்துவி னிலைதர வந்தவெம் மடிகள்
பகவத் பூஜ்ஜிய பாத ஸ்ரீமத்
ஜகதா சாரிய சங்கர னுய்வந்
திருட்டொழி வித்தெழு மினனேர் காட்டுஞ்
சிருட்டிதி ருட்டி திருட்டிசி ருட்டிப்
பக்கமி ரண்டின் பண்பினி தோர்ந்து
தக்கவ ஜாதத் தன்மை யடைந்தோய்
முராரி தாஸன் முந்தைஜ மேதா
விராய வேலூ ரிலக்கு மைய
நாயக னில்லற நாயகி சேஷத்
தாயவ ளீன்பின் றநய வகத்திற்
றாயோய் ஸ்ரீமத் சுவகீயா னந்த
மாயோ கிகளென் மலையச் சித்த
ராஜ வடிகட் காளாஞ் ஸ்ரீமத்
ஞான னந்த நாதமு னிக்குரு
மாணவ ஜேஷ்ட மங்காப் புகழோய்
ஆணவ மில்லா வைய தொல்லை
செய்யா மொழியின் றிறனறி விக்கு
மெய்வே தாந்த வித்வசி ரோமணி
மாசில் லாஸ்ரீ மத்நா ராயண
தேசி கேச திரிகுண ரகித
உயிருல கிறையா யோங்கியு மோங்கா
வயிருள பொருளா யாசற் றூர்தஞ்
சிந்தையி லொளிதரு தேவா யார்க்கும்
பந்தம றுத்துப் பழவினை போக்கு

மேதது நீயல திலேவே ருக
வீதறி யாதா ரெய்தார் பரசுக
மெய்தார் பரசுக மெவ்வகை யானும்
னையா ரெங்ஙன் நாடுவ ரீத
சலவே தாந்தத் தலையா மென்ன
நலஸ்ரீ அநுபவா நந்த தீபிகைத்
திருமுறை மூன்றுஞ் செல்வர்க் கருளுங்
குருபர ஞகிக் குவலயந் தன்னிற்
கற்றவர் கல்லார் கயவர் தெவ்வர்
மற்றுள வோர்க்கும் வரமருட் கமல
கரத்தாய் போற்றி கண்ணே போற்றி
சுரத்தாய் போற்றி துரையே போற்றி
மெய்யே போற்றி விமலா போற்றி
பொய்யே யறியாப் புனிதா போற்றி
வேதா போற்றி வெளியே போற்றி
நாதா போற்றி நலமே போற்றி
அச்சுத போற்றி அநகா போற்றி
நிச்சல போற்றி நிமலா போற்றி
நித்யா போற்றி நிறையே போற்றி
சத்யா போற்றி சதுரா போற்றி
போற்றி போற்றி பூமா போற்றியென்
றேற்றப் படுமென் னிறைவன் பிரிய
சீடன் குருவே திருமால் கைலை
நாடன் பிரமன் நல்கும் பிரமம்
வேறென் றறியேன் வேறென் றறியேன்
மாறென் றில்லை மண்மீ தென்போன்
வேலோர் தங்கும் வெளியம் பாக்கம்
மேலோன் பதும வேளாண் குலமுனி

சாமி நாயுடு தவத்துணை யாகி
வாமி யருளால் மாண்புறு முத்து
அம்மை செல்வ னோங்கர மூர்த்தித்
தம்மை யன்பொடு சாருந் தனிகன்
கற்குழை சொல்லின் கணேச மூர்த்தி
சற்குரு ஸ்தவமதைச் சாற்றின னதனுல்
குருவரு ணுடிக் குறையாச் செல்வமும்
வருநோ யற்ற வாழ்வும் பெற்றுங்
குலகோ ருய்ய வுளவைக் காட்டி
நலமின் மாயா நாட்டம் வீட்டித்
தாழ்வறு ஞானச் சகஜா நந்த
வாழ்வடைந் தனனே வாழ்வடைந் தனனே.

உ

# சாத்துக்கவிகள்.

காசிவாசி. ஸ்ரீமத். சிவானந்தசுவாமிகளியற்றிய

நேரிசை வெண்பா.

நாரா யணதே சிகன்ருட்க ணன்ருகப்
பாரா யணஞ்செய்யப் பண்புடனே—யேராக
சொன்னன்குருஸ்தவத்தைச்சோர்வில்கணேசப்பேர்
பொன்னன்னிகராய்ப்புகல்.

---

திருவருட்பிரகாசவள்ளலார்மரபினரும்
மோட்சசாதனமுதலியநூல்களினசிரியருமாகிய
காஞ்சீ. ஸ்ரீமத். நிச்சல இராமானந்தசுவாமிகளியற்றிய
பதினன்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாமேவு மன்னருடன் மதிமேவு புலவரும்
மாண்புடன் மன்னி வாழும்
மாட்சிபெறு சென்னைவாழ் ஸ்வகியா னந்தயோ
கிகளெனும் பொதிகை மலையின்
தூமேவு சித்தர்மர பதனில்வரு வோன்ஞான
நந்தபெய ரதனை துன்னித்
துயருறுஞ் சீவரக விருளைத் தொலைத்திடத்
தோன்றியக் கதிரை நிகர்வோன்
தேமேவு நல்லநா ராயண தேசிகன்
திருவடிக் கடிமை பூண்டே
திகழ்மௌன நிலைநாடி வினைசாடி கதிகூடி
தெளிவினருண் மாலை சூடி

பாமேவு கவிசொல்க ணேசமூர்த் திப்பெயர்ப்
பண்டிதன் குருஸ்த வத்தைப்
பகர்ந்தனன் படித்தோர்க ணன்னிலை சேர்வரிது
படிறலச் சரத மாதோ.

வேதாந்த தருக்க வித்வசிகாமணி.

ஸ்ரீமத். முருகேசமுதலியாரியற்றிய

ஆசிரியப்பா.

சீரார் கடற்சூழ் தேசம் புகழும்
பேரார் மன்பதைப் பெட்புடன் போற்றும்
சீருஞ் சிறப்புஞ் செறிந்து மேவும்
காரும் பொழிலிற் கலந்து வாழுஞ்
சென்னைமா நகரிற் றினந்தின மகிழ்ந்த
மன்னிய நன்னிலை மறவாத் தூயன்
ஓதருஞ் சுகியா நந்தயோ கியெனு
மாதர் சித்தர் மரபினில் வந்தோன்
ஞான நந்த நிலைதனை நண்ணிய
தேனர் நாரா யணதே சிகன்றூண்
மலரை மறவா மாண்புறு மனத்தன்
பலரை நன்னெறிப் பற்றச் செய்வோன்
மூதுணர் கணேச மூர்த்தி யென்னும்
மாதர் குணத்தன் மாண்குரு ஸ்தவமதை
படிப்போர் மனமும் பண்புடன் கேட்போர்
திடப்படுஞ் செவியுந் தேரும் வண்ணஞ்
செய்தனன் சொற்கண்டு பயந்தேன்
துய்திதன் றன்மையைச் சொல்லுவ தென்னே.

வேதாந்த தருக்க போதகாசிரியரும்
சென்னை இந்துதியலாஜிகல்ஹைஸ்கூல்தமிழ்ப்பண்டிதருமாகிய
மகாவித்வான்
ஸ்ரீமத். கோ. வடிவேலுசெட்டியாரியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேசார்ந்த நிலையமர்நா ராயணதே
சிகனடியைச் சிரத்திற் கொண்டு
மாசார்ந்த நிலையொருவி மனமாண்ட
நிலைபெற்று வாழ வுன்னிப்
பூசார்ந்த நற்கணேச மூர்த்தியெனு
நல்லறிஞன் பொற்பு வாய்ப்ப
மீசார்ந்த சற்குருஸ்த வஞ்சொற்று
னவன்றுனய் விளங்க மாதோ.

திருத்துருத்தி இந்திரபீடம்
கரபாத்திரசுவாமிகளாதீனத்திற்குரிய
ஈச்சூர். ஸ்ரீமத். சச்சிதானந்த சுவாமிகள்
மாணக்கரிலொருவராகிய
ஸ்ரீமத். பு. ஆறுமுகமுதலியாரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்பூத்த சித்தர்மர புக்குரிய
நாரா யணனெனுந் தேசிகன்மே
லேர்பூத்த குருஸ்தவமென் றொருநூலை
யெவருமதித் திடர்க்குச் சொற்றன்

நீர்பூத்த குமிழெனநின் றழியுலக
மெனவுரைக்கு நிபுணன் மேன்மேல்
பேர்பூத்த கணேசமூர்த் திக்குநிகர்
பேருலகிற் பேசற் கின்றே.

மகாவித்வான்

ஸ்ரீமத். ஆ. மே. சென்னகேசவலுநாயுடவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உத்தமநற் குணசுவகியா நந்த யோகி
யுயர்பொதிகை மலைச்சித்தர் மரபிற் றோன்றி
பத்திமிகு மிலக்குமையன் பரிந்து செய்த
பகருஞ்சீர் தவந்திரண்டிப் பாரின் மீதில்
சத்தியநற் குணஞானு னந்த ரூபந்
தான்றிரண்டே வந்தநாரா யணசா மிப்பேர்
நித்தனிரு தாண்மலர் நினைக்க வேண்டி
நிகரில்குரு ஸ்தவமதனை நிலவச் செய்தான்.

வே று.

மாசிலாக் குணதிலகன் மன்னியநற் சாதுசங்கம்
மறவா நேயன்
தேசுலாங் கதிர்மதியம் போலொளியை யெந்நாளுந்
தெளியக் காண்போன்
ஆசுடைய மனத்தவரை வலிதழைத்திங்கடைமினென
வன்பின் சொல்வோன்
மாசடைய சங்கரனைச் சங்கரியைப் பணிகணேச
மூர்த்தி மாதோ.

சென்னை பூலோக வியாசன் பத்திராதிபரும்,
வேதாந்த வித்வசிரோன்மணி
ஸ்ரீமத். ல. நாராயணசாமிதேசிகரின்மாணாக்கருமாகிய
மஹாஞானபாநு ஸ்ரீலஸ்ரீ. சதாவதானம்
பூஞ்சோலை முத்துவீரநாவலரவர்களியற்றிய
தொடர் வெண்பா.

தந்தையாய்த் தாயாய்த் தமராய்ப் பரமுமா
யெந்தையா யெண்ணரிய வேகனாய்—சிந்தைக்கு
மப்பாலுக் கப்பாலா யானந்த பூரணமா
யொப்பா மணிவிளக்கா யுள்ளத்தி—ருப்பாகுஞ்
சித்தஞ் சிவமாய்த் தெளியும் பிரக்ஞான
தத்துவச் சித்தியெலாந் தானாகி—நித்தநித்த
நான்மறை யின்முடிவு நாடு முபநிடத
வான்கலையு மேநீட வத்துநிலை—தான்றான்
கருதருமா னந்தங் காட்டு மவனே
குருதருமா னந்தக் குவட்டுட்—பெருவோன்
பொதிகை மலைச்சித்தன் பொன்னடிய னாகுந்
துதிகை சிரங்கூப்புந் தொல்லோன்—மதிவதியு
நாதமுனி நாதன் நனிபிறங்கு ஞானனெனின்
நாதனருந் தேசிகனே நாரணன்—பேதமற்றான்
சற்குருஸ்த வம்நூலைத் தானேத்தித் தானுணர்ந்த
பொற்குணத்தான் யாவன் புகல்வல்பெரு—நற்குணத்
தீட்ட நிலவியெங் கெங்கும் பொழில்வண்ட [தா
ரீட்ட வயர்மடவா ரின்பார்ந்த—நாட்டமரும்
வெள்ளியம் பாக்கம் விழைஞானப் பொற்சாகை
கொள்ளியம் பற்கரிய கோமானே—தெள்ளரிய
கல்வியுளா னன்பார் கணேசமூர்த் திப்பெயரான்
நல்விவேகங் கொண்டவனிந் நாள்.

புதுவை வித்வான்

ஸ்ரீமத். அ. ஜகந்நாதநாயுடவர்களியற்றிய

அகவற்பா.

திருவளர் மார்பன் சீதரன் கண்ணன்
மருமலர்ப் பாதன் மங்கள வதனன்
சங்கு சக்கரன் சற்குரு நாதன்
பொங்குங் கருணை புண்ணிய னிந்த
மண்ணு ளோர்பவத்தை மாற்றிச் சுகந்தர
வெண்ணிப் பொதிகை எழின்மலைச் சித்தராய்
வந்தவ தரித்த மாகுரு சிகாமணி
அந்தரச் சுவகீ யானந்த யோகீ
மரபினி லுதித்தவன் மாசிலாக் குணத்தவன்
பரநிலை யுணர்ந்தமா பாக்கிய சாலி
தரணியு முயிருஞ் சர்வேஸ் வரனும்
பிரஹ்மமே யென்னும் பேரறி வாளன்
எங்கே கெல்லினும் ஏகவெளிபோல்
எங்கே யாயினும் ஏக வறிவெனும்
உண்மை யுணர்ந்தே உத்தமர்க் கோதும்
திண்மை யுடையவன் தேடற் குரியவன்
நாரா யணனெனும் நல்ல தே சிகன்
சீரா ரடிகளைச் சிரமேற் கொண்டு
சத்குரு ஸ்தவமெனச் சாற்றுமோர் நூலைப்
பத்தியிற் புகன்றான் பலர்க்குப காரமாய்
அன்னோன் யாரெனில் அறிஞர் நன்னுடெனப்
பன்னிய வெளியம் பாக்கத் துறைபவன்
சாந்தி முதலாய்ச் சாற்றிய நான்கும்
போந்த வுளத்தினன் புனித நடையினன்

பழியும் பாவமும் பாமரர் நேசமும்
ஒழித்த மேலவர் உறவே செய்பவன்
ஒழுக்க முடையநல் லுத்தம சீலன்
அழுக்கா றில்லா வறிஞ னெனப்பலர்
மொழியுங் கணேச மூர்த்தி யென்னும்
அழியாப் பெயரை யடைந்தவன் மாதோ.

பிரமபீடம் ஸம்பத்கிரி
ஸ்ரீமத். அச்சுததாஸசுவாமிகள் மாணாக்கர்
ஸதனபுரி (எலப்பாக்கம்)
ஸ்ரீமத். இராமசந்திரகுருசாமிதாஸரவர்களாலியற்றிய
ஆசிரிய விருத்தம்.

பூமாதுக் கணிதிலகம் போன்றொளிர்வெ
    ளியம்பாக்கம் பொருந்தி வாழும்
சீமானு முனிசாமிச் செம்மலருந்
    தவத்தினுக்காச் செறிநல் லன்பாற்
பாமாதிவ் வுலகிடையோர் பாவலனு
    யினனெனவுற் பவித்தெஞ் ஞான்றுங்
காமாதி யறத்திகழுங் கணேச கவி
    குருஸ்தவத்தைக் கழன்றான் மன்னே.

ஸ்ரீமத். சகஜாநந்தசுவாமிகளியற்றிய
நேரிசை வெண்பா.

ஆரணங்கள் காணு வரும்பொருளாய் நின்றகுரு
நாரணனூர் பாதத்தை நாடோறுந்—தாரணஞ்செய்
செம்மல் கணேசமூர்த்தி செய்தான் குருஸ்தவத்தை
அம்மதன் னூராமை யால்.

காஞ்சீபுரம்

ஸ்ரீமத். நிச்சல இராமானந்தசுவாமிகள் பாதசேகரராகிய

ஸ்ரீமத். கா॰ சொருபானந்தமணிசுவாமிகளியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பொன்வளர் பொதிகை யான்சீர்ப்
    பொலிந்தலர் ஞான னந்த
சின்மய னருள்சேர் நாரா
    யணசாமி தேசி கன்றுட்
கன்பிற்சற் குருஸ்த வத்தை
    யளித்தக ணேச மூர்த்தித்
தன்மையைத் தமையு ணர்ந்தோர்த்
    தானன்றிச் சாற்றற் பாற்றே.

மகா குமாரதேவ சுவாமிகள் பரம்பராதீனம்

ஸ்ரீமத். பி. வீ. பாலதேசிகநாயனர்

மாணாக்கரிலொருவரும்

சென்னை. ஸ்ரீகஜவரதராஜப்பெருமாள் சன்னிதான

தர்மகர்த்தருமாகிய

ஸ்ரீமத். பூ. அரியபுத்திரதாஸரவர்களியற்றிய

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நலந்துய ரேற்குஞ் ஜனனமீ டேற
    நலியநன் றுதமு னீசன்
உலகுயிர் பரமு மறிவெனத் தேற்ற
    வுள்ளவா றுணர்ந்து மெய்ஞ்ஞானத்

தலமது தருண ராயண சாமி
சற்குரு தனைநினைந் துருகி
சலனம தொடுங்க சற்குருஸ் தவத்தைச்
சாற்றினன் கணேசமூர்த் தியுமே.

காஞ்சீபுரம். ஸ்ரீமத். நிச்சல
இராமானந்தசுவாமிகள்பாதசேகரராகிய
சித்தாதிரிப்பேட்டை
ஸ்ரீமத். சா. நிச்சலானந்தசுவாமிகளியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சீர்பூத்தப் பொதிகைவளர் சித்தர்தம்
மரபென்றுஞ் செழித்து மோங்கப்
பேர்பூத்த வருணரா யணசாமி
தேசிகநற் பெம்மான் றாட்க
ணார்பூத்த செந்தமிழாற் குருஸ்த
வத்தை நவின்ற ணிந்தான்
பார்பூத்த புகழுடையான் பகருங்க
ணேசமூர்த்திப் பாவ லோனே.

வேதாந்த வித்வ சிரோமணி
ஸ்ரீமத். ல. நாராயணசாமி தேசிகரவர்கள்
மாணாக்கரிலொருவராகிய
ஸ்ரீமத். அருணகிரிசுவாமிகளியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பருத்திலகு மனமாயை யிரவியெதிர்
நிசியென்னப் பறந்து போக
அருத்தவடி வானரா யணசாமி
தேசிகனென் னையன் மீதிற்

கருத்துளமெய் யடியவனுய்ச் சத்துவமே
குடிகொள்ளுங் கணேச மூர்த்தி
குருஸ்தவமென் றொருநூலை மெய்ஞ்ஞானச்
சுடர்வீசக் குறித்தான் மன்னே.

ஷை தேசிகரவர்கள் மாணக்கரிலொருவராகிய
ஸ்ரீமத். பு. நா. எதிராஜதாஸரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பன்னிரண் டாண்டு மீளாப்
பணிகொளுங் குருப தத்தாற்
பன்னிட வரிதா முத்தி
பாக்கியந் தன்னை யெங்கோன்
றன்னிட மெளிதி னேர்ந்து
சற்குரு ஸ்தவத்தைச் சொன்ன
முன்னிலை யொழிக ணேச
மூர்த்தியான் யூக மென்னே.

சென்னை ஸ்ரீ கஜவரதராஜப்பெருமாள் சந்நிதான தர்மகர்த்தர்
ஸ்ரீமத். பூ. அரியபுத்திரதாஸர்மாணக்கர்
ஸ்ரீமத். து. முருகேஸம்பிள்ளையவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

பாரா யணர்காணப் பண்டை மறைப்பொருடேர்
நாரா யணசாமி ஞானகுரு—மாராயன்
கற்பகலா வுள்ளக் கணேசமூர்த் திக்கவிசெய்
சற்குருஸ்த வங்காண் டனி.



உ

விநாயகன்றுணை.

# ஸ்ரீ சற்குருஸ்தவம்.

## அடைக்கலம்.

அவரவர் நினைவி லமர்ந்தது வாகி
யவரவர் நினைவள வருள்கண பதியே
வன்பவக் கடலினை வாய்மடுத் துண்டோ
னின்புறு மரபினி லிறைநா ராயண
சித்தனாய் வந்த சின்மய சொருப
புத்திசற் றில்லாப் புலையேன் றன்னை
யுலகுயிர் பரமுன துணர்வல திலையென
சலனமிற் சாந்த சாகரத் தாழ்த்தி
தன்னே ரில்லாத் தனிமறைப் பொருளே
யன்னைக் கிணையா யருட் குரு நாத
வுண்மை வெளியா யுரைப்போ யடைக்கலம்
பெண்ணா ணலியாய்ப் பேர்ந்தோ யடைக்கலம்
திரிபுடி யாகித் திகழ்வோ யடைக்கலம்
அரியய னாகு மறிவே யடைக்கலம்
மூவருங் காணா முதலே யடைக்கலம்
பாவலர் புகழும் பரமே யடைக்கலம்
ஐயநின் னடைக்கல மத்தநின் னடைக்கலம்
துய்யநின் னடைக்கலந் துணைநீ யடைக்கலம்

சற்குருஸ் தவமதைச் சழக்கிலா தோத
அற்பனு மெளியே னடைக்கல முமக்கே.

## சொரூப வணக்கம்.

நித்திய நிராமயமாய் நிற்குணநி ரஞ்சனமாய்
சத்தியவ கண்டமதாய் சர்வபரி பூரணமா
யத்துவித மெய்ப்பொருளா யானந்தா னந்தமதா
யொத்துளசர் வோத்தமமா மொருபொருளைச் சிந்திப்பாம்.

வானாகி மண்ணாகி வளியொளியாய் நீராகி
ஊனாகி யுயிராகி யுயிரினிறை யுணர்வாகி
நானாகி மறையாகி நாரணசற் குருவாகித்
தானாகித் தனியாகுந் தன்மையனைச் சிந்திப்பாம். (2)

அரியானை யமரர்கட்கு மன்ப ரன்றி
யருமறையு மறியாத வருமை தன்னைப்
பிரியாத பெருமையுடைப் பேறியாவும்
பெற்றானை யற்றானைப் பிறவான் றன்னைப்
பெரியானைப் பெரிதுக்கும் பெரிதாந் தன்னைப்
பேரானந் தப்பொருளாம் பெருமான் றன்னை
யரியயனு மறியவொணா வத்தன் றன்னை
யண்ணறனை யநுதினமு மன்பு செய்வாம். (3)

## நாராயணபஞ்சகம்.

தாயாகி யெந்தை யுறவாகி நின்றெ
னிடர்தீர்க்க வைத்த தயவே
பேயாம னத்தை நாடா தழித்த
தறியார் பிதற்று பெரிதா

மாயாபி றப்பை வாரா தொழித்த
தாரா லுரைக்க வசமே
நாயாகு மென்னை நீயாவ மைத்த
நாராய ணாய நமவே. (1)

ஒன்றாகி யெங்கு மறிவா யிலங்கு
பதியாகு மௌன வுருவே
யன்றாலி னீழ லதினின்று வேத
முடிகாட்டி யாண்ட தடியேன்
பொன்றாத போத சுகரூப வாழ்வி
லுறைவித்து வக்கு பொருளே
நன்றாகு மென்னை யான்காண வைத்த
நாராய ணாய நமவே. (2)

யோகத்தி னாலு மெட்டாநி லங்கொ
ளுயர்சத்ய ஞான யோகி
யூகத்தி னாலு முணரா வதீத
வுணர்வென்னு மோன யூகி
போகத்தி னிச்சை வேரோ டறுக்கு
மயர்வொன் றிலாத போகி
நாகத்தி னுள்ள மாமென்னு மெங்க
ணாராய ணாய நமவே. (3)

அறிவாகி யெங்கு மொளியாய் விளங்கி
யிருணீங்க வந்த வருளே
குறியாதி பேத மவையோட வென்னு
ளுருவாகு மௌன குருவே
செறிபோக மாகி மனிதாதி யாகி
யசைவற்ற வெங்க டேவே

நறிதுன்ப மென்னை யணுகா வணஞ்செய்
நாராய ணய நமவே. (4)

## வேறு.

வேயேயு தோளியர்க ளாசாபி சாசமது
விண்ணோடி மாய விரைவாய்
தீயேயெ னத்திகழு மாயாஜ கத்தரிய
திறலோர்க ணடு சிவமே
சேயேனு ளங்குளிர வேதாக மத்துளுறை
தேவேயெ னுது திருவே
நாயேனை யாளகுரு வாவந்தி ரங்கியரு
ணராய ணய நமவே. (5)

## போற்றி.

மூதலிலா முதலேயாதி மூதறி வானஜோதி
மதமது சிதறவாளு மறைமுடி வாம்விநோதி
யிதமதா யானுணர்ந்த வீறிலா ஞானநீதி
நிதமெனை யாளவந்த நின்மல போற்றிபோற்றி. (1)

வேதம தறியாப்பாதம் வேதனை தீர்க்கும் பாதம்
நாதனுய் நின்றபாதம் நல்லரு ளானபாதம்
பாதகன் சென்னிமீது பதியவைத் தாடுபாதம்
சாதனை யானபாதம் சற்குரு பாதம்போற்றி. (2)

ஊனுமா யுயிருமாகி யுயிரினுக் குணர்வு மாகி
வானுமாய் மண்ணுமாகி மற்றுள வெல்லாமாகி
கோனுமாய் குருவுமாகி கூறிடு மறைக ளாகி
தானுமா யானுமாகுஞ் சங்கர வடிவேபோற்றி. (3)

## அபயம்.

வேதநீ வேதிநீ வேதகா ரணனுநீ
போதநீ புவனநீ புவனகா ரணனுநீ
யாதிநீ யையநீ யமரரு மறியொணுச்
சோதிநீ யாயவெங் துயரிலி யபயமே. (1)

காமநீ க்ரோதநீ கடும்பசி தாகநீ
நேமநீ நிட்டைநீ நிற்குணக் கடவுணீ
பாமர ரறியொணுப் பாக்யநீ பகவநீ
நாமரூ பம்மிலா நாயக வபயமே. (2)

அருளுநீ மருளுநீ யன்புநீ வன்புநீ
யிருளுநீ யொளியுநீ யின்பநீ துன்பநீ
பெருமைநீ சிறுமைநீ பெரியவா னங்நீ
கருவமை யாதநற் காவல வபயமே. (3)

பாவநீ யின்மைநீ பாவனு தீதநீ
தாவரா திகளுநீ தற்பதப் பொருளுநீ
பாவபுண் ணியமுநீ பந்தமுத் திகளுநீ
தேவருந் தேடொணுத் தேசிக வபயமே. (4)

## விண்ணப்பம்.

ஆரணங்க ளுக்குமாதி யாகவந்த காரணு
பூரணம தாய்நிறையும் புனிதஞான நாரணு. (1)

ஒன்றிரண்டு மூன்றுமாகி யுள்ளவெங்க டெய்வமே
யென்றுமுன்னை மனதிலே யிறைஞ்சி தொண்டு செய்வமே.

அங்குமிங்கு மெங்குமாகி யாதியான லிங்கனே
துங்கஞான சோதியாய்த் துலங்குமந்த ரங்கனே. (3)

அல்லுனுளு மெல்லையற் றமர்ந்தவெங்க ளாதியே
தொல்லைமாய சொல்லவல்ல தொல்லை ஞானசோதியே.

ஆயகாய தேயமாகி யன்றுமாகி நின்றவா
நேயநீ யலாததில்லை ஞேயமாதி யென்றவா. (5)

அத்தநித்த முத்தர்போற்று மத்துவித கர்த்தனே
சித்தபெத்த முத்தியற்ற சித்விலாச நிர்த்தனே. (6)

அன்னையுன்னை யன்றியில்லை யன்பினுளுங் கண்ணனே
என்னையென்னை யன்றிசொல்ல நீதியுண்டோ வண்ணனே.

## மனதிற்கறிவுறுத்தல்.

உலக முதற்பொரு ளானவனை
யும்பர்க டம்பெரு மான்றன்னை
இலகிய வேதம தானனை
யென்றனை யாட்கொள வந்தானை
சலனமி தின்றி யிருந்தானை
சற்குரு நாரண னுமவனை
கலகமு டன்வாழ்க் கடைமனமே
கற்பக னைத்தொழு தழுவாயே. (1)

அரனய னுக முடிந்தானை
யன்பர்கண் மனமவை யுண்டானை
பரம தயாபர னுந்தேனைப்
பாரினி லுருகொடு வந்தானை
சிரமதிற் கரமதை வைத்தானைச்
சிற்குரு நாரண னுமவனை
தரமறி யாதுழற் றடிமனமே
தற்பர னைத்தொழு தழுவாயே. (2)

எனையொரு பொருளா யெண்ணினானை
யெப்பொரு ளுந்தா னுந்தன்னை
யனைபோ லூட்டவே வந்தானை
யத்தனை முத்தனை யறிவோனை
வினைகளை வேருட னறுத்தானை
வீரனை யானந்த நாரணனை
உனையறி யாதலை வுடைமனமே
உத்தம னைத்தொழு தழுவாயே. (3)

## குருவல்லபம்.

தனக்குநிக ரில்லாத தாதாவடீ
தன்மயம தாயாக்கும் வேதாவடீ
மனப்பகையை வென்றமெய் மாதாவடீ
மாதயா ஞானகுரு நாராயணன். (1)

காணாத ஞானயி பர்த்தாவடீ
கண்டதனைப் பொய்யாக்குங் கர்த்தாவடீ
வீணாகு முடலைவிடு வித்தானடீ
வீரனா னனந்த நாராயணன். (2)

அஞ்ஞான திமிரமறு வித்தானடீ
ஆசையெனும் பசுமாள வைத்தானடீ
சுஞ்ஞான பாநுவாய்த் தோன்றுவனடீ
துயரறு சிவானந்த நாராயணன். (3)

இந்தவுல கென்னினைவே யென்றானடீ
யிருமறையி னந்தமீ தென்றானடீ
மந்தர்களைச் சேறறுய ரென்றானடீ
மகாத்மனா னனந்த நாராயணன். (4)

ஆறிவேநின் னுருவென் றறைந்தானடீ
ஆதியறி வலதில்லை யென்றானடீ
சிறியேனை யாளவருந் தேசிகனடீ
சின்மயா காரகுரு நாராயணன். (5)

## மயில் குயில்.

ஏகமான சோலைதனி லாடுமயிலே
யெம்பிரா னருளைதினம் பாடுகுயிலே
தேகமாகு மோகமதைத் தாண்டுமயிலே
தேசிகநா ராயணனைப் பாடுகுயிலே. (1)

ஆகமசாத் திரங்களி லாடுமயிலே
யன்புருவா மன்னைவரப் பாடுகுயிலே
சோகமென்ப தைக்கடந்தே யாடுமயிலே
தூயகுரு நாரணனைப் பாடுகுயிலே. (2)

மெய்யைக்காண மையல்கொண்டே யாடுமயிலே
மேன்மைதரு மையன்வரப் பாடுகுயிலே
கையர்தம் மயக்குரைவிட் டாடுமயிலே
கர்த்தன்குரு நாரணனைப் பாடுகுயிலே. (3)

இந்தஞால மென்றன்ஞாந மாடுமயிலே
என்றன்ஞாந மையனுகும் பாடுகுயிலே
சிந்தைகலி தீர்ந்ததென்றே யாடுமயிலே
சின்மயநா ராயணனைப் பாடுகுயிலே. (4)

பொய்யுலகை மெய்யென்றெண்ணா தாடுமயிலே
பொய்யொழித்த நாதன்வரப் பாடுகுயிலே
வெய்யவினைக ளோடுமென் றாடுமயிலே
வேதகுரு நாரணனைப் பாடுகுயிலே. (5)

## கிளி.

ஆதியறி விடத்தே கிளியே
யற்பமாய்த் தோன்று * மூன்றை
சோதித் தறிவாயேற் கிளியே
சொன்மாத்தி ரமாகும். (1)

நித்தியா நித்தியங்கட் கிளியே
நீமுன்ன றியவேணும்
நித்திய மின்னதெனக் கிளியே
நீயறிந் துநிலைப்பாய். (2)

நில்லாத காயமடி கிளியே
நிச்சய மில்லையடி
பொல்லாத வாழ்விதடி கிளியே
போயொழிய விடுவாய். (3)

கண்ணிற் பீளையடி கிளியே
காதிற்குரும்பியடி
தண்ணீர் நாசியினிற் கிளியே
தாராளமாய் வடியும். (4)

† ஐவர்சமைக்குஞ் செல்வங் கிளியே
அற்பமதாய் நினைவாய்
பையரவின் விடமே கிளியே
பண்பதற் காகுமடி. (5)

தேவபோகமுந் துக்கங் கிளியே
தேருவதென் னினையாய்
தேவா சுரர்கதை கிளியே
தேசத்தின் மெத்தவுண்டு. (6)

---

* ஜக ஜீவ பரம். † ஞானேந்திரியங்களைந்து.

மனமடங்க வேணும் கிளியே
 மையலொழிக்கவேணும்
மனமடங்கு மிடங் கிளியே
 மாருச்சு கநிலேயே. (7)

ஐந்திதச் சத்துருக்கட் கிளியே
 ஆசையிற் கூட்டுவிப்பார்
நைந்துபோகு மிடமே கிளியே
 நாசர கிதமடீ. (8)

ஏதுமுன் செயலென்றே கிளியே
 எண்ணுவதென் கெடுவாய்
ஏதுன் னியதியென்றே கிளியே
 ஈசார்ப் பணம்புரிவாய். (9)

காமாதி மூவிருவர் கிளியே
 கற்ருேரையுங் கெடுப்பார்
ஏமாற்றங் கண்டுணர்ந்தாற் கிளியே
 என்றுமுன் னின்மறைவார். (10)

தேகத்தை நம்பியல்லோ கிளியே
 ஜென்மம் வளர்ந்ததடீ
ஊகத்தைக் கொண்டுணர்வாய் கிளியே
 உத்தமன் றன்னருளால். (11)

சற்குரு வாக்கியத்தைக் கிளியே
 சந்ததமு னினேவாய்
நற்பல னீதேயடி கிளியே
 நாதன் வருவாரடி (12)

வேதாந்த தேசிகர்மேற் கிளியே
 மெய்யன்பு கொள்ளுவையேல்

வேதாந்த வாரிதியிற் கிளியே
வேதனை போக்கிக்கொள்வாய். (13)

மாயாப்ர பஞ்சமடீ கிளியே
மயங்கிச் செல்லாதே
தாயாங்குருவை விட்டு கிளியே
தயங்கி நில்லாதே. (14)

நன்றுநன் றல்லதுவுங் கிளியே
நாச மடையுமடீ
என்றழியாச் சுகமே கிளியே
எண்ணித் துணிவாயடீ. (15)

என்ன படித்தாலென் கிளியே
என்ன நடித்தாலென்
தன்னை யறிந்தல்லோ கிளியே
தற்பர மாகவேணும். (16)

கிட்டைக ளேதுக்கடீ கிளியே
நேமங்க ளேதுக்கடீ
சட்டை கழித்தறிவாய் கிளியே
சாதுக்களை யடைந்து (17)

பேய்ப்பிடித் தவளைப்போற் கிளியே
பேதங்கட் பண்ணுதே
நாய்தனக் கேதுசொந்தங் கிளியே
நாயகனுக் கல்லால் (18)

உற்றுநீ பார்ப்பாயேற் கிளியே
உண்மை யுண்டாகுமடீ
உற்றுதான் பாராமற் கிளியே
ஊரெங் கணுந்திரிவாய் (19)

எல்லாம் வந்ததென்றே கிளியே
ஏய்க்குங் குரவருண்டு
பொல்லாருரை நம்பி கிளியே
போகத்தி லாழாதே (20)

எங்கே பிறந்தாயடீ கிளியே
எங்கே வளர்ந்தாயடீ
எங்கே மறைவாயடீ கிளியே
யென்சங்கை தீர்ப்பாயடீ (21)

கானலி னீருண்டோ கிளியே
கயிற்றி லரவுண்டோ
ஞானமா மென்னுருவிற் கிளியே
நாடுல கங்களுண்டோ (22)

என்னை யறிந்தல்லோ கிளியே
யிவ்வுரை யாடலானேன்
நின்னை யறிவாயேற் கிளியே
நீயுமென்னின் மறைவாய் (23)

நாராயண குருவின் கிளியே
நற்றாமரைப் பதத்தை
பாராமற் பார்த்திருக்கக் கிளியே
பாங்காய் விளையுமின்பம் (24)

பெருமை யற்றோனடீ கிளியே
பேராசை விட்டோனடீ
தரும வானவனே கிளியே
தற்பர நாராயணன் (25)

அயலில்லாமற் செய்வான் கிளியே
ஆனந்த ஞானகுரு

மயலை நீயகற்று கிளியே
மாதவனை யடை.வாய் (26)

நாமரூப மில்லான் கிளியே
நாயேனை யாளவந்தான்
ஆமவனை யுரைக்க கிளியே
ஆகுமோ வென்னாலே. (27)

## பரிபவம்.

ஈசனே ஜீவா தார மென்றுபின் ஜீவ ருள்ளி
லீசனே யானெய் போன்று னெனவுரை தந்து நோக்கி
யீசனே ஜீவர் மற்றை யாவுமா மலவா மென்னு
மீசனும் நாரணன்ற னிணையடி போற்று ரென்னே.(1)

எந்தகா ரணத்தி னாலோ விவ்வுட லதை யடைந்துப்
பந்தம தகற்றி ஞானப் பார்வையை யீந்து மெய்யா
யந்தமி லெனையான் காண வாக்கின நார ணன்றன்
சிந்தனை செய்யா ராகிச் சீரடி போற்று ரென்னே.(2)

வேறு.

சிரமாகு மறைகளினாற் சொல்லப் பட்டச்
சீரான கருமங்கட் செய்து மென்ன
திரமாகு மெத்தெய்வ மெனது தெய்வஞ்
சேனுயர னின்ற தெனத் தர்க்கித் தென்ன
வரமாகுஞ் ஞானவடி வான பேரே
வாழ்வார்கள் சாசுவத வாழ்வு தானென்
றுரமாகும் படியருண ராய ணன்ற
னுபயதிரு வடிமலரைப் போற்று ரென்னே. (3)

## திருவுந்தி.

சொல்லாமற் சொன்னகுரு சொல்லைப் பிடித்துமெய்
யல்லாததை விட்டோ ருந்தீபற
அத்துவித மானவரென் றுந்தீபற. (1)

நில்லாம னத்தை நிறுத்தக் கருமங்க
ளெல்லாமுஞ் செய்வாரென் றுந்தீபற
ஏகமாந் தனையறியா துந்தீபற. (2)

தனையறிய வேணுமெனத் தான்முயலு வோரிங்கெ
தனையறிவ ரோவறியே னுந்தீபற
தத்வங்களை யொழியா துந்தீபற. (3)

கண்காண் பொருட்களைக் காண்பதொன் றேயொழியக்
கண்காணு மோகண்ணை யுந்தீபற
கண்ணேக ணுகையா லுந்தீபற. (4)

எல்லாமுங் கண்ணுய்க் கரைத்தமெய்ஞ் ஞானிக்குப்
பொல்லாத தொன்றுண்டோ வுந்தீபற
பொருளயலி லாமையா லுந்தீபற. (5)

உள்ளன்பி லாதபேர் கள்ளமன துடையபேர்
வள்ளலைக் காணுரென் றுந்தீபற
வாதாடிச் சாவரென் றுந்தீபற. (6)

தத்துவச் சட்டைகளைத் தானெழித் தாலொழிய
முத்தியைச் சேர்வதில்லை யுந்தீபற
மூடமொழி யாததா லுந்தீபற. (7)

பொன்னைவிடப் பொருளில்லை பணிதிகளுக் சென்றுமறை
சொன்னதா லென்னைவிட வுந்தீபற
சொற்பொருள்க ளில்லையென் றுந்தீபற. (8)

செயலுமிலை செய்வதிலை சேர்மனதை யற்றுநில்
லயலுமிலை யாகுமெனு முந்தீபற
ஆதிமறை முடிவினுரை யுந்தீபற. (9)

ஆதார மாதேய மாகுமெனை யானறிய
பேதமுன் சொன்னமறை யுந்தீபற
பேச்சில்லை முடிவிலெனு முந்தீபற. (10)

தன்னைமெய் யறிவென்று தானறியு ஞானிகள்
பின்னைப் பிறப்பதே துந்தீபற
பிரமமே யாவரென் றுந்தீபற. (11)

அருளாகி மருளாகி யருவாகி யுருவாகி
தெருளாகு ஞானமே யுந்தீபற
தெய்வமய வில்லையென் றுந்தீபற. (12)

இலக்கணங் கல்லா திலக்கியங் காண்பவர்
துலக்கமாய் நிற்பரென் றுந்தீபற
துரியமது வாகையா லுந்தீபற. (13)

சற்குருவை சேவைசெய் சற்புருட ரென்னுளு
நிற்குணத் துறைவரென் றுந்தீபற
நின்மலமாய் நிற்கையா லுந்தீபற. (14)

தொல்லை கடந்திறை சொல்லைப் பிடித்தவர்க்
கில்லை பிறப்பிறப் புந்தீபற
ஈசனாய் நிற்றலா லுந்தீபற. (15)

என்னின் றிரங்கியெனை யானறிய வேவந்த
தன்னியஞா னானந்த னுந்தீபற
தனித்தகுரு நாரணனென் றுந்தீபற. (16)

மனமெனும் மதயானை மேலேற வேயெங்கள்
கனமான ஞானகுரு வுந்தீபற
கற்பனை கடத்தினு னுந்தீபற. (17)

கற்ருருங் கல்லாருங் கண்டுணரு மெய்ஞ்ஞாந
வற்ரு சமுத்திரமென் றுந்தீபற
வள்ளல்குரு நாரணனென் றுந்தீபற. (18)

அறுபகைவர் குடிமாள வானந்த மதுநீள
சிறுவனுக் கருளினு னுந்தீபற
சிற்பரநா ரணகுருவென் றுந்தீபற. (19)

இந்திரிய மாம்பேய்க ளெனைவிட் டகன்ருேடத்
தந்திரம தாய்த்தந்தா னுந்தீபற
தத்வமசி திருநீற்றை யுந்தீபற. (20)

வாதமிடு பாதகருக் கேதுசுக மென்றெனைச்
சோதனையிற் காட்டினு னுந்தீபற
சொற்படி நடந்ததா லுந்தீபற. (21)

ஆரணமு மறியாத காரணனீ யென்றுகுரு
நாரணன் சொன்னபின் னுந்தீபற
நான்காண வயலில்லை யுந்தீபற. (22)

ஆதார மாகுமெனை யறியாது பற்பலப்
பேதமாய்க் கண்டவெனை யுந்தீபற
பெரியபொரு ளாக்கினு னுந்தீபற. (23)

சித்திரமா முலகமிது செத்ததென வோராதப்
பித்தர்தமைச் சேரானென் றுந்தீபற
பீழையொழி யாமையா லுந்தீபற. (24)

கற்பனைக ளியாவுங் கடந்தரிய துரியசிவ
சிற்பரம தானேனென் றுந்தீபற
சிற்குருவி னருளினா லுந்தீபற. (25)

நினைவின்றி பொருளில்லை நினைவில்லை யெனையன்றி
யெனையா னடைந்தேனென் றுந்தீபற
எப்பொருளு மானேனென் றுந்தீபற. (26)

தேகங்க ளுக்கெலாந் தேகியிவ னென்றறிந்
தேகன் கணேசனென் றுந்தீபற
என்றந்தை கூவின ரென் றுந்தீபற. (27)

தந்தையிலை தாயுமலை பந்தமிலை வீடுமிலை
சிந்தைகலி தீர்ந்ததே யுந்தீபற
சின்மயசற் குருவினா லுந்தீபற. (28)

என்னையா னறியவே யாவுமாய் நின்றவிதை
யென்னென்று சொல்வதினி யுந்தீபற
ஏகவறி வாகையா லுந்தீபற. (29)

என்றகைமை யறிவென்னு மென்றந்தை யன்பின்வரு
நன்றிக்கென் கைம்மாறென் றுந்தீபற
நானுமவ னவதே யுந்தீபற. (30)

## எக்காளம்.

அரியரனு மொன்றான ரூதடா காளம்
ஆதியறி வாகையா லூதடா காளம். (1)

இரவுபக லற்றவிட மூதடா காளம்
ஈசனாய் நின்றநிலை யூதடா காளம். (2)

உத்தமர்க ளடிபணிந் தூதடா காளம்
ஊகமாய்க் கண்டுணர்ந் தூதடா காளம். (3)

என்னையான் கண்டேனென் றூதடா காளம்
எத்தற்கரி யகுருவா லூதடா காளம். (4)

ஐயமெலாந் தீர்ந்ததென் றூதடா காளம்
ஐயனருட் பார்வையா லூதடா காளம். (5)

ஒப்பேது மில்லையென் றூதடா காளம்
ஓங்காரத் துட்பொருட்கென் றூதடா காளம். (6)

ஔபாச னைக்குமரி தூதடா காளம்
அஃதாஞ் சொரூபநிலை யூதடா காளம். (7)

## குரு அநுக்கிரக போதம்.

அறிவினை யன்றி யில்லை
யறிவறி யாமை யென்று
வெறியர்க ளறிவ தில்லை
வேறென வீண்வாய்ப் பேசி
பிறிவிலா வான்ம ரூபப்
பேறதை யிழந்து மோனக்
குறியினி லாழா ராகிக்
குருடராய்ப் போவ ரன்றே. (1)

அன்றென நீக்கி நோக்கி
யாமெனச் சகஜ மாக்கி
பொன்றுத லில்லா வின்பப்
புநித வாரிதி யெழுந்தென்
நன்றிது தீதென் றெண்ணு
ஞற்றம தொழிய நாடுங்
குன்றுத லடையா மோனக்
கோண்முத லாகி ஞனே. (2)

ஆனவெ னழிவி லாத
வாரியன் கருணை யாலே
யீனமாங் குறைக ணீக்கி
யென்னக மேயு லாவி
நானவ னாகு மென்றுஞ்
ஞானம தாகு மென்றும்
மோனவா னந்த மூட்ட
மூதறி வானே னந்தோ. (3)

அந்தோ வீதறியா முன்பென்
னல்லலைச் சொல்லப் போமோ
மந்தமா மிருட்க யிற்றின்
வெளவுநல் லரவைக் கண்டுச்
சிந்தனைச் செய்வோ னொத்துச்
சிறுமையா முலக மென்னில்
வந்ததென் றுணர்கி லாது
வருந்தினேன் கோடி காலம். (4)

காலமாய் நியதி யாகிக்
கற்பனை தானு மாகி
யாலமா யமிர்த மாகி
யரியதற் பரனு மாகிச்
சீலமாய்ச் சிவமு மாகிச்
சீவர்க ளாகி ஞேய
ஞாலமாய் ஞான மாகி
ஞாதுரு வாகு மாசான். (5)

ஆசானை யடைந்த போதே
யரிய மெய்ஞ்ஞானம் பெற்றேன்
மாசான மனமு மற்றேன்
மற்றவை யாவும் விட்டேன்

தேசான ரூப மானேன்
　　தெய்வங்க டெய்வ மானேன்
பாசாபந் தங்க ணீங்கிப்
　　பரமனாய் நின்றேன் குருனே. (6)

தானேயிவ் வுலக னைத்துந்
　　தானேயிவ் வுயிர னைத்துந்
தானேயிவ் வடிவ மெல்லாந்
　　தானேயிப் பெயர்க ளெல்லாந்
தானேயா முணரு முன்புந்
　　தானேயா முணர்ந்த பின்புந்
தானேயா னெனவு ணர்ந்தேன்
　　குருனேயா மைய மில்லை. (7)

இல்லையென் றுணை யில்லை
　　யென்றனி யுருவ நோக்கில்
இல்லைபொன் னன்றி ரூப
　　மிகபர மியாவு மற்றே
தொல்லையாம் பவமொ ழிக்கத்
　　தொடரு மெய்ச் சீடருக்கே
யெல்லையி லறிவா னந்த
　　மீவனே நார ணன்காண். (8)

## கீர்த்தனைகள்.

இராகம் சாவேரி - தாளம் ஆதி.

பல்லவி.

குருமஹாராஜகுரு - ஜய - நாராயண சத்குரு.

அநுபல்லவி.

பாமரனாய்த்தா மதனாய்நின்றேன்
தாமதமின்றியாண் டருளரிஹரசத். (குரு)

சரணங்கள்.

வினையலவேறிலை யெனுமுனைக்கண்டேன்
தனுகரணபுவன போகாதிகள்வேண்டேன் (குரு)

வேண்டேன்புகழ் வேண்டேனினையல்லால்
வேண்டேனிகபரந் தீண்டேனென்றும் (குரு)

காஷாயகமண்டல முடன்வரும்பொய்
வேஷாக்களைவிட்டே னின்றருள்தொட்டேன் (குரு)

சேய்பசிகண்டு சீர்முலைதந்திடுந்
தாய்தனைப்போலென் னல்லலைத்தீர்ப்பாய் (குரு)

மனைகனதனதா னியமெனதெனுமா
மனமாயையொழிப்பாய் மங்களகரனே (குரு)

வானுய்கிலனு யிருளாயொளியாய்த்
தேனுய்க்கனியாய்த் திகழ்வாய்போற்றி (குரு)

அக்கரமின்னதென் றறியேனசடன்
இக்கணங்கணேசனைக் காத்திடுமுன்கடன். (குரு)

இராகம் நாதநாமக்கிரியை - தாளம் சாப்பு.

பல்லவி.

குருவே துணை - ஞாந - குருவே துணை.

அநுபல்லவி.

குருவன்றியிலையிந்தக் குவலயந்தனிலந்தக்
கருவழிதனைச்சிந்த அருவுருவெனவந்த. (குரு)

சரணங்கள்.

உற்றுப்பாருனையன்றி யுண்டோவுலகமென்றுஞ்
சற்றுகவனியெனுஞ் சத்துசித்தானந்த (குரு)

அறிவேயென்வடிவென் றறிபாதிருந்தவெனை
யறிவாக்கிமயல்போக்கி யானந்தமதுகூட்டும் (குரு)

சதியாகுமனதுப்பொய்ச் சாராதழித்தஞாந
நிதியாகிநின்றமெய்ந் நிலையாகும்நாரண. (குரு)

இராகம் கல்யாணி - தாளம் ஆதி.

### பல்லவி.

மனமே என்சொற்படி நட ஓர்
மருந்தை முடித்துதாரேன் (ஓமனமே)

### அநுபல்லவி.

சினமில்லாஞானகுரு தனையேயடைந்தநு
தினமும்நித்தியசுகந் தனையேயடையே (ஓமனமே)

### சரணங்கள்.

மாயாமயசம் சாராம்புதிதனின் மதிமயங்கிநீ மூழ்காதே
வேயார்தோளியருருவமதைக்கண் டினிதெனபின்றொடராதே
வருமோகத்தை யினிக்கொள்ளாதே
தருமாம்சத்தினுற் செய்தகூதே
இது தீதே அறி பேதே (ஓமனமே)

தசையுடனரம்பெனுமுபாதிகள்கூடிய தடியுடலிதைநம்பாதே
நசையுடனிதிலிருந்தாளுவமேனசொலி யாரிருந்தார்புவிமீதே
இதுவளரப்பொருளைத் தேடாதே
சதிமூடருறவை நாடாதே
அலையாதே அறியிப்போதே (ஓமனமே)

பொய்த்தந்தையர்தமர் தாராதிகள்பொய்
மெய்மெய்யென மறைசொல்லும்
மெய்க்குருநாரண னுமவனுரைகளை
மேற்கொண்டன் னெறிநில்லும்
சொன்னேன்கணபதி பகலல்லும்
என்னேரமுமவன் புகழ்சொல்லும்
பொய்தள்ளும் மெய்கொள்ளும். (ஓமனமே)

### வாழி.

வேதவி யாதன் வாழி விமலசங் கரனர் வாழி
பாதகன் றன்னை யாண்ட பரமநா ரணனர் வாழி
நீதமே குடிகொ ணெஞ்சர் நீர்மலி பூவில் வாழி
ஓதசற் குருஸ்த வத்தை யுள்ளுவோர் வாழி வாழி.

முற்றிற்று.

ஸ்ரீமத். சுவகீயானந்த யோகிகளென்னும்

பொதிகைமலைச் சித்தர்மரபு

ஸ்ரீமத். ல. நாரயணசாமிதேசிகர் மாணுக்கரி

லொருவராகிய

படவூர். மணவாளநாயுடு அவர்களியற்றிய

# போற்றிப்பஞ்சகம்.

வேதத்தின் முடிவ தாகி
விளங்குமா வாக்கி யத்தை
போதத்தி லுறவே நாடிப்
புறமக மற்ற நீயே
ஏதஞ்சற் றில்லா வீச
னென்றெனக் கருளு னின்சீர்
பாதத்திற் கீடிங் குண்டோ
பரமநா ரணனே போற்றி. (1)

சத்திய நெறியி னின்று
சாத்திர மனைத்துந் தேர்ந்து
நித்தியா னந்த ஞகி
நிலைத்ததோ ரனுப வத்தை
புத்திசேர் புருடர் தங்கட்
புன்மய லொழிய பிரம்ம
வித்தியை விளக்கு மோர்நூல்
விளம்புநா ரணனே போற்றி. (2)

தெரிவினை யன்றி வேறு
செம்பொரு ளில்லை நின்றாற்
றெரிபடு முலக னைத்துந்
திகழுனின் சொருப மென்றே
பரிவுட னெனக்குச் சொன்ன
பரமகா ருண்ய மூர்த்தி
அரியர னாகி மாலு
மானநா ரணனே போற்றி. (3)

அன்னிய மில்லா தென்று
மமலசிற் சொருப மாகுந்
தன்னிலை தானாய் நின்ற
தத்துவப் பொருளே யிங்கு
நின்னிலை கண்ட வன்றே
நீள்பவ மொழியு மீதே
நன்னிலை யாகு மென்னு
ஞாரணக் குருவே போற்றி. (4)

தந்தையே நின்சீ ரோதுஞ்
சற்குருஸ் தவத்தைச் சொன்ன
நிந்தையிற் கணேச மூர்த்தி
நீணிலத் தென்றும் வாழ
விந்தைசே ருமது பொன்று
விமலதா ளிணையைச் சேர்ந்தேன்
இந்தைதேர் நார ணாவென்
றேசிகா போற்றி போற்றி. (5)

58841
Q2:417
N14

6A
6-108

# இப்புஸ்தகங்கிடைக்குமிடங்கள்.

(1) N. கன்னையநாயுடு,

No. 2, பாட்ரி வீராசாமிசந்து

சைனாபஜார்ரோட்,

ஜியார்ஜ்டவுன்

மதிறஸ்.

(2) ஆதிநாராயணமூர்த்தி

or

கிருஷ்ணமூர்த்தி,

கல்லாங்குத்துகிராமம்,

மருதாடுபோஸ்டு,

வந்தவாசி தாலூக்கா.